



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவூர் ஊராட்சியில் ரூ.4.98 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் கோவூர் குளத்தை குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர் ப.சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### விழுப்புரம் மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு விழுப்புரம் மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 24.06.2025 | கண்டமங்கலம் மத்திய ஒன்றியம் | பாக்கம் கூட்டுரோடு | முருக்கம் முனுசாமி<br>எ.கீர்த்தனா |
| 2 | | கண்டமங்கலம் தெற்கு ஒன்றியம் | சொரப்பூர் | முருக்கம் முனுசாமி<br>எ.கீர்த்தனா |
| 3 | | விழுப்புரம் நகரம் கிழக்கு | பழைய பேருந்து நிலையம் எதிரில் | வளவனூர் ப.அன்பரசு<br>த.இன்பகுமரன் |
| 4 | | காணை கிழக்கு ஒன்றியம் | கோனூர் | வளவனூர் ப.அன்பரசு<br>த.இன்பகுமரன் |
| 5 | 25.06.2025 | வானூர் கிழக்கு ஒன்றியம் | திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு | வளவனூர் ப.அன்பரசு<br>ந.அப்துல் வகாப் அதாயி |
| 6 | | வானூர் மத்திய ஒன்றியம் | பாப்பான்சாவடி | வளவனூர் ப.அன்பரசு<br>ந.அப்துல் வகாப் அதாயி |
| 7 | | கோட்டக்குப்பம் நகரம் | கோவில்மேடு | வளவனூர் ப.அன்பரசு<br>ந.அப்துல் வகாப் அதாயி |
| 8 | | விழுப்புரம் நகரம் மேற்கு | தந்தை பெரியார் நகர் (டி.பி.டி.சி.) | முருக்கம் முனுசாமி<br>கே.அஸ்வின்குமார் |
| 9 | | கோலியனூர் மத்திய ஒன்றியம் | மரகதபுரம் | முருக்கம் முனுசாமி<br>கே.அஸ்வின்குமார் |
| 10 | 26.06.2025 | கண்டமங்கலம் வடக்கு ஒன்றியம் | வி.நெற்குணம் | துரை மணிவேலன்<br>கே.அஸ்வின்குமார் |
| 11 | | வானூர் மேற்கு ஒன்றியம் | சிறுவை | துரை மணிவேலன்<br>கே.அஸ்வின்குமார் |
| 12 | | கோலியனூர் கிழக்கு ஒன்றியம் | கோலியனூர் கூட்டுரோடு | வே.விக்ரமன்<br>ந.அப்துல் வகாப் அதாயி |
| 13 | | வளவனூர் பேரூர் | நான்கு முனை கடைவீதி, வளவனூர். | வே.விக்ரமன்<br>ந.அப்துல் வகாப் அதாயி |
| 14 | 27.06.2025 | கிளியனூர் கிழக்கு ஒன்றியம் | நல்லாவூர் | துரை மணிவேலன்<br>த.இன்பகுமரன் |
| 15 | | கிளியனூர் மேற்கு ஒன்றியம் | தைலாபுரம் | துரை மணிவேலன்<br>த.இன்பகுமரன் |
| 16 | | கோலியனூர் தெற்கு ஒன்றியம் | அரசமங்கலம் | வே.விக்ரமன்<br>எ.கீர்த்தனா |
| 17 | | கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம் | கடைவீதி, மோட்சகுளம், சிறுவந்தாடு | வே.விக்ரமன்<br>எ.கீர்த்தனா |

விழுப்புரம்

நாள் : 22.06.2025







# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி பா.செந்தில்குமார் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 23.06.2025 | சாக்கோட்டை கிழக்கு ஒன்றியம் | பனம்பட்டி | கு.சுமித்ரா |
| 2 | | புதுவயல் பேரூர் | பேருந்து நிலையம் | கு.சுமித்ரா |
| 3 | | சிங்கம்புணரி பேரூர் | சந்திவீரன் கூடம் | ஞா.சந்தியா |
| 4 | | நெற்குப்பை பேரூர் | அழகிய நாச்சியப்பன் திடல் | ஞா.சந்தியா |
| 5 | 24.06.2025 | தேவகோட்டை தெற்கு ஒன்றியம் | முப்பையூர் | சி.அய்யாச்சாமி<br>கு.சுமித்ரா |
| 6 | | தேவகோட்டை வடக்கு ஒன்றியம் | புளியால் | சி.அய்யாச்சாமி<br>கு.சுமித்ரா |
| 7 | | சிங்கம்புணரி தெற்கு ஒன்றியம் | எம்.சூரக்குடி | சிவ முத்துவளவன்<br>ஞா.சந்தியா |
| 8 | | சிங்கம்புணரி வடக்குஒன்றியம் | ஏ.காளாப்பூர் | சிவ முத்துவளவன்<br>ஞா.சந்தியா |
| 9 | | மானாமதுரை கிழக்கு ஒன்றியம் | செய்களத்தூர், சமத்துவபுரம் | தமிழ்பிரியா பிரபாகரன்<br>அ.சார்மதி |
| 10 | | மானாமதுரை மேற்கு ஒன்றியம் | சின்ன கண்ணனூர் | தமிழ்பிரியா பிரபாகரன்<br>அ.சார்மதி |
| 11 | 25.06.2025 | தேவகோட்டை நகரம் | ஒத்தக்கடை | அ.கணேசன்<br>ஞா.சந்தியா |
| 12 | | காரைக்குடி நகரம் | பழைய பேருந்து நிலையம் | அ.கணேசன்<br>ஞா.சந்தியா |
| 13 | | திருப்பத்தூர் வடக்கு ஒன்றியம் | சமத்துவபுரம் அருகில் | கு.சுமித்ரா |
| 14 | | கல்லல் மேற்கு ஒன்றியம் | கொரட்டி | கு.சுமித்ரா |
| 15 | | இளையான்குடி கிழக்கு ஒன்றியம் | அளவிடங்கான் | தமிழ்பிரியா பிரபாகரன்<br>கு.ஹரிசங்கர் |
| 16 | | இளையான்குடி தெற்கு ஒன்றியம் | சாத்தனூர் | தமிழ்பிரியா பிரபாகரன்<br>கு.ஹரிசங்கர் |
| 17 | | சாக்கோட்டை மேற்கு ஒன்றியம் | கொத்தமங்கலம் | பா.கணேசன்<br>நா.நவீன் |
| 18 | | கோட்டையூர் பேரூர் | ஸ்ரீராம் நகர் | பா.கணேசன்<br>நா.நவீன் |
| 19 | | சிவகங்கை நகரம் | அம்பேத்கர் சிலை அருகில் | சிவ முத்துவளவன்<br>சி.ராஜபாரதி |
| 20 | | சிவகங்கை தெற்கு ஒன்றியம் | வண்டவாசி | சிவ முத்துவளவன்<br>சி.ராஜபாரதி |
| 21 | | திருப்பத்தூர் தெற்கு ஒன்றியம் | கல்வெட்டித் தெரு | தமிழ்பிரியா பிரபாகரன்<br>பீ.ஜோஷி அபர்ணா |
| 22 | | திருப்பத்தூர் பேரூர் | அக்னி பஜார் மூலை | தமிழ்பிரியா பிரபாகரன்<br>பீ.ஜோஷி அபர்ணா |
| 23 | 26.06.2025 | காளையார்கோவில் கிழக்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் | சி.அய்யாச்சாமி<br>கு.ஹரிசங்கர் |
| 24 | | காளையார்கோவில் தெற்கு ஒன்றியம் | மறவமங்கலம் | சி.அய்யாச்சாமி<br>கு.ஹரிசங்கர் |
| 25 | | சிவகங்கை வடக்கு ஒன்றியம் | மதகுப்பட்டி | பா.கணேசன்<br>அ.சார்மதி |
| 26 | | நாட்டரசன்கோட்டை பேரூர் | கோயில் அருகில் | பா.கணேசன்<br>அ.சார்மதி |

சிவகங்கை

நாள் : 22.06.2025




சென்னை தெற்கு மாவட்டம்

# கலைஞர் நகர் வடக்கு - தெற்கு பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் மு.இராசா - கே.கண்ணன் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 23 -

சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர் நகர் வடக்குப் பகுதி - தெற்குப் பகுதிக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது என பகுதிச் செயலாளர்கள் மு.இராசா - கே. கண்ணன் ஆகியோர் அறிவித்துள்ளனர். இது குறித்து அவர்களது அறிவிப்பு வருமாறு:-

விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர்நகர் வடக்கு தெற்கு பகுதி வட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று (23-6-2025) மாலை 5 மணிக்கு ஆற்காடு சாலையில் உள்ள கலைஞர்நகர் வடக்கு பகுதி அலுவலகத்தில் நடைபெறுகிறது. விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, கணக்கு நிலை குழு தலைவர் க.தனசேகரன், தொகுதி பொறுப்பாளர் வே.உமாகாந்த் ஆலோசனை வழங்கி பேசுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு, தெற்கு வடக்கு பகுதி அவைத் தலைவர்கள் தலைமையில், மாவட்ட துணை செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் முன்னிலையேற்கும் இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள், அனைத்து வட்ட செயலாளர்கள் கண்டிப்பாக தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டு கொள்கிறோம்.

பொருள் : கழக தலைவர் அறிவித்த புதிய உறுப்பினர் சேர்க்கை, BLA 2 கூட்டம் சம்பந்தமாக.

இவ்வாறு கலைஞர் நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் மு.ராஜா, தெற்குப் பகுதிச் செயலாளர் கே. கண்ணன் ஆகியோர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர்.